நகர்மன்றம்

உதகமண்டலம்

22.11.2023

அன்புடையீர்

வணக்கம், இந்நகர்மன்ற நவம்பர் 2023ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 30.11.2023 வியாழக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>

<u>செப்டம்பர் 2023 ம் மாத நாரமன்ற கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்</u>

1. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட புல எண்.F/5/21/4, கொண்ட வுட்காக் சாலை பகுதியில் நில உபயோக மாற்றம் செய்ய திரு.ஞானகுரு, அவர்கள் விண்ணப்பித்துள்ளார். இது தொடர்பாக வேளாண்மை பொறியியல் துறை, வனத்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோர்களது தடையில்லா சான்று கோரி விண்ணப்பிக்கப்பட்டதில் கீழ்கண்ட துறைகளிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை. உதகை அவர்களின் கடிதம் ந.க.எண்.1/39776/2022, நாள்.29.10.2022ன் மூலமும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களின் கடிதம் ந.க.எண்.26053/2022 நாள்.16.03.2023 ன் மூலமும் தடையில்லா சான்றுகள் வரப்பெற்றுள்ளது.

திரு.ஞானகுரு, அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். F/5/21/4, கொண்ட 2.66 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை நில உபயோக மாற்றம் செய்ய AAA குழுவின் அனுமதி பெறும் பொருட்டு உள்ளூர் திட்டக் குழும அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

**மூன்று துறைகளின் தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளதால் AAA குழுவின் ஒப்புதல் பெற உள்ளூர் திட்டக் குழு அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.6474/2023/எப்1)**

<u>அக்டோபர் 2023 ம் மாத நாரமன்ற கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்</u>

2. இயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துகள் துறை சென்னை, அவர்களின் சுற்றறிக்கையின் படி உதகமண்டலம் நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் கொசுக்கள் மூலம் பரவும் (நோய்கள்) காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகாக கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமனம் செய்து தினசரி அறிக்கைகள் மாவட்ட சுகாதார துறைக்கு அனுப்ப வேண்டியுள்ளது.

உதகமண்டலம் நகராட்சிக்கு மாவட்டம் நிர்வாகத்தின் அறிவுரையின் படி 85 கொசு ஒழிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது. உதகமண்டலம் நகராட்சியின் சீதோஷ்ண நிலை மற்றும் நிதி நிலையினை கருத்தில் கொண்டு சுமார் 35 கொசு ஒழிப்பு பணியாளர்கள் மாவட்ட ஆட்சியர் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் ஒப்பந்தாரர் மூலம் வெளிக்கொணர்வு முகமை அடிப்படையில் நிர்ணயம் செய்து உதகமண்டலம் நகராட்சி பகுதியில் கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.40,00,000/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

**மன்ற அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்- 3261/2019/எச்2)**

**<u>நவம்பர் 2023 ம் மாத நகரமன்ற கூட்டப்பொருட்கள்</u>**

3. இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணிகள் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டிற்கான தேவையான உபகரணங்கள் கூடை, துடைப்பம் , பெரிய மண்வெட்டி , சிறிய மண்வெட்டி, சவுல் கொத்து , கடப்பாறை, பல்ரேக், பட்டை ரேக், கையுறை, போன்ற தளவாடை பொருட்கள் உபகரணங்கள் வாங்கி வழங்க தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.9.90/- இலட்சத்திற்கு இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.,

**அலுவலக குறிப்பு –**

**பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றம் அனுமதி வழங்கலாம்**

**(ந.க.எண்-361/2019/எச்2)**

**4.** இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்- TN 43 M 7026 (Scorpio) வாகனத்தின் ஓட்டுநர் குறிப்பிட்டுள்ள, புதிய ஆரன், மிஸ்ட் லைட், புளோர் மேட், நேம் போர்டு ஸ்டிக்கரிங் மற்றும் சீட்கவர் போன்ற வேலைகள் பார்க்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும். மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சீர் செய்ய Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam அவர்களிடம் ரூ.60,700/- க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனம் அரசு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனமாக உள்ளதாலும் அந்நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான வானம் எண்- TN 43 K 2197 (Scorpio) பழுதடைந்து உள்ளதால் வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளதாலும் தற்பொழுது வாகனத்தின் Clutch மற்றும் வாகனத்தின் உதிரி பாகங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை இயக்க இயலவில்லை என்று வாகன ஓட்டுநர் கோரியுள்ளார். எனவே மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சீர் செய்ய Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam அவர்களிடம் ரூ.70,500/- க்கு விலைப்புள்ளி பெற்ப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனம் அரசு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனமாக உள்ளதாலும் அந்நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.7442/2023/இ2)**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்- TN 43 D 5805 (Bolero) சுமார் 50,000 கி.மீ ஓடியுள்ளதால் டயர்கள் மிகவும் தேய்ந்து வாகனம் இயக்க மிகவும் கடினமாக உள்ளதாலும்

மற்றும் வாகனத்தின் உதிரி பாகங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை இயக்க இயலவில்லை என்று வாகன ஓட்டுநர் கோரியுள்ளார். எனவே மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சீர் செய்ய Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam அவர்களிடம் ரூ.47,600/- க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனம் அரசு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனமாக உள்ளதாலும் அந்நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.7515/2023/இ2)**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான வாகனம் எண்-TN 43 F 4793 (Desilting man auto) பழுதடைந்து உள்ளதால் வாகனம் இயக்க முடியாத நிலையில் உள்ளதாலும் தற்பொழுது வாகனத்தின் Clutch மற்றும் வாகனத்தின் உதிரி பாகங்கள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை இயக்க் இயலவில்லை என்று வாகன ஓட்டுநர் கோரியுள்ளார். அதன் அடிப்படையில் தற்பொழுது கோடைக்கலாம் மிகவும் நெருங்கி விடுவதாலும், சுற்றுலா பயணிகள் அதிமாக வருவதாலும் அவ்வாகனத்தை உடனடியாக சீர் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சீர் செய்ய ABT Industries Limited , உதகை அவர்களிடம் ரூ.32,000/-க்கு விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனம் அரசு அங்கீகாரம் பெறப்பட்ட நிறுவனமாக உள்ளதாலும் அந்நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ2/7220/2023)**

8. இந்நகராட்சிக்கு உட்பட்ட அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் டாக்டர்.கலைஞர் அவர்களின நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்டம் இணைந்து 04.11.2023 அன்று உதகை அரசினர் கலைக் கல்லூரியில் மாபெரும் வேலைவாய்ப்பு நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் கோவை, ஈரோடு, திருப்பூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் இருந்து பல்வேறு தொழில் நிறுவனங்கள் கலந்து கொண்டு வேலை நாடுநர்களை தேர்ந்தெடுக்க உள்ளனர். வேலை பெறும் நோக்கத்துடன் முகாமிற்கு சுமார் 1000த்திற்கும் மேற்பட்ட மனுதாரர்களும் அவர்களுடன் துணையாக 200 நபர்களும் வேலை வாய்ப்பு அளிக்கும் 100 நிறுவனங்கள் தலா இரண்டு பிரநிதிகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாமினை நடத்தும் அரசு அலுவலர்கள் பணியாளர்கள் தன்னார்வலர்கள் என குழும உள்ளனர். எனவே முகாம் நடைபெறுவதற்கு முந்தைய நாளான 03.11.2023 அன்று அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் தற்காலிக கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதியினை ஏற்படுத்தி தர மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுத்தலின் படி (க.எண்.அ7/385/2023 நாள்.30.10.2023)ன் கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது. எனவே மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.32,500/- க்கு பணியினை அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15ன் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அனுமதி வழங்கலாம்.

9. இந்நகராட்சி பொறியியல் பிரிவு TN 43 C 1837 Sullage Sucker தகுதி சான்றிதழ் முடிவடைந்துள்ளதாலும் மற்றும் பழுதுகள் சரி செய்ய வேண்டியுள்ளதால். மேற்படி வாகனத்தினை இயக்க முடியாத காரணத்தினால் மேற்படி பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் மதிப்பீடு தொகை ரூ.1,60,000/- க்கு மட்டும் நகர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. **மேற்படி வாகனத்தின் பணிகள் மேற்கொள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பணியினை உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட விலை விபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,58,650/-**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்காக மதிப்பீடு செலவினத்தினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்காக.**

   **(ந.க.எண்.இ2/6830/2023)**

10. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 குளிச்சோலை பகுதியில் உள்ள குடை மரம் செல்லும் சாலை கடந்த ஆண்டுகள் பெய்த மழையினால் சாலை ஆனது முற்றிலும் பழுதடைந்து உள்ளது. இதனால் மழைக்காலங்களில் இச்சாலை வழியாக வாகனங்கள் சென்று வர முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. மேலும் மழைக்காலங்களில் பள்ளி குழந்தைகள் பெரியவர்கள் மற்றும் வயதானவர்கள் இச்சாலையை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புசுவர் உடன் கூடிய சாலை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.27.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலோ அல்லது அரசின் 2024-25 ம் ஆண்டிற்கான சாலை மேம்பாட்டுப் பணிகள் திட்டத்திலோ பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

11. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 குளிச்சோலை சாலையின் ஓரத்தில் உள்ள வீடுகளில் இருந்து வரும் கழிவுநீர் ஆனது சாலையில் செல்வதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்று ஏற்படும் நிலை உள்ளது. மேலும் சாலையின் ஓரத்தில் கழிவுநீர் செல்வதால் சாலையில் செல்லும் பள்ளிக் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் இதனை மிதித்துக் கொண்டு செல்கின்றனர். மேலும் சாலையின் ஓரத்தில் கழிவுநீர் செல்வதால் சாலை அரிக்கப்படுவதுடன் சாலை பழுதடையும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் சாலையின் ஓரத்தில் surface drain அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட

மதிப்பீட்டுத் தொகை ரூ.9.85/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

12. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 குளிச்சோலையில் உள்ள நடைபாதை ஆனது கடந்த ஆண்டுகளில் பெய்த மழையினால் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறியுள்ளது. இதனால் இந்த நடைபாதையை அப்பகுதியில் உள்ள பள்ளிக்குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த நடைபாதையை புதிதாக புணரமைப்பு செய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.90/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

13. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 2 ஆர்.சி காலனி உள்ள 2" குடிநீர் குழாய் சுமார் 30 வருடத்திற்கு முன்பு போடப்பட்டது. இதில் அடிக்கடி குடிநீர் லீக் ஆவதால் சாலையில் ஆங்காங்கே குடிநீர் வீணகி வருகிறது. குழாய் துருபிடித்து உள்ளதால் சரிவர தண்ணீர் வீடுகளுக்கு செல்வதில்லை இதனால் பொதுமக்கள் மிகவும் அவதி படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் சுமார் 200 மீட்டர் தூரம் குழாய் மாற்றி தருவது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.75/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

14. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.36 லவ்டேல் பகுதியில் உள்ள குள்ள கவுடர் லைன் பகுதியில் 30 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்கண்ட பகுதி வனப்பகுதிக்கு அருகாமையில் உள்ளதால் வனவிலங்குகள் இரவு நேங்களில் மின் விளக்குகள் இல்லாததால் வீடுகளுக்குள் புகுந்து அப்பகுதி மக்களை அச்சுறுத்தும் விதமாக உள்ளதால், மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி ஏற்கனவே உள்ள 10 மின்கம்பங்களில் மின் விளக்குகள் பொருத்த மின்கம்பிகள் புதிதாக அமைக்கவும் மற்றும் அதற்கான செலவுத் தொகையை மின்சார வாரியத்திற்கு செலுத்தவும் நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

15. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 35 கருணாநிதி காலனி பகுதியில் போதிய மழைநீர்க் கால்வாய் இல்லாததால் மழைக் காலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று விடுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் மக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் புதிய மழைநீர்க் கால்வாய் அமைக்க வேண்யடிது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**16.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.28ல் மணி லாட்ஜ் பகுதியில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர், அப்பகுதியில் சாக்கடை கழிவுநீர் செல்வதற்கு சரியான வசதியில்லாத காரணத்தால் கழிவுநீர் குடிநீர் உடன் கலந்து சுகாதார சீர்கேடு ஏற்பட்டு வருகின்றது. மேலும் கழிவுநீர் நடைபாதையில் ஓடுவதால் பொதுமக்கள் நடைபாதையில் நடக்க முடியாத நிலை ஏற்பட்டுகிறது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி கழிவுநீர் செல்வதற்கு நடைபாதையுடன் கூடிய கழிவுநீர் கால்வாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.90/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**17.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.36ல் வேல்வியூ பகுதியில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு பெய்த மழையினால் தடுப்புச்சுவர் இடிந்து விழுந்து நடைபாதை முழுவதும் சரிந்து உள்ளது. இதனால் அப்பகுதி வழியாக பொதுமக்கள் வயதானவர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் இந்த நடைபாதையை பயன்படுத்துவது மிகவும் சிரம்மாக உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பணியினை செய்வது மிகவும் அவசியமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.62.00/- இலட்சத்திற்கு ஏதேனும் ஒரு அரசு திட்ட நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

**18.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.2 கணபதி நகர் என்ற இடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 2009 ஆம் ஆண்டு இலவச வீட்டுமனை பட்டா இடத்தில் வீடுகள் கட்டப்பட்டு பொதுமக்கள் குடியிருந்து வருகின்றனர். அப்பகுதியில் சுமார் 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் ஏற்கனவே 4 மின்கம்பங்கள் அமைக்கப்பட்டு மின் விளக்குகள் பொருத்தப்பட்டு எரிய வைக்கப்பட்டு உள்ளது. ஆனால் மீதமுள்ள இடங்களில் மின்விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் வனப்பகுதியில் இருந்து வனவிலங்குகள் குடியிருப்பு பகுதிக்குள் வந்து விடுகின்றன. இதனால் மக்கள் மிகவும் அச்சத்துடன் வாழ்ந்து

வருகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் மின்விளக்கு அமைக்க புதிதாக 4 மின் கம்பங்கள் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்த நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

19. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட பொதுகழிப்பிடங்கள் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை நகராட்சி நகர்நல அலுவலர் அவர்கள் (MHO) இடித்து புதிதாக கட்டி தரும்படி அறிவுறுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| Div (1) | 1.Finger Post Toilet | PT |
| | 2.Butfire | CT |
| | 3.Karuppu Man Olai | CT |
| | 4.Thoppan Line | CT |
| Div (2) | 5.Baby Hall | CT |
| | 6.Ambetkar Street | CT |
| | 7.Kil Bogi Street | CT |
| | 8.Pallivasal Street | CT |
| Div (3) | 9.Bandi Shola | CT |
| | 10.Forest Gate | CT |
| | 11.Old Garden Road | CT |
| Div (4) | 12.Nahar Backside | CT |
| | 13.Old Agraharam | CT |
| | 14.Mary's Hill | CT |
| Div (5) | 15.Old Ooty | CT |
| | 16.Thalayatimund | CT |
| | 17Nondimedu | CT |
| | 18. Short line | CT |
| Div (6) | 19.Miniki Sholai | CT |
| | 20. Elkhill | CT |
| Div (7) | 21.Lower Bazaar | CT |
| | 22.Butcher Street | CT |

மேற்கண்ட இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. இக்கட்டிடங்கள் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பழுதடைந்துள்ள கட்டிடமாகும். இக்கட்டிடங்களின் ஸ்திர தன்மை (Stability) இல்லாமல் உள்ளது. எனவே மேற்கண்ட கழிப்பிட கட்டிடங்களை ஏதேனும் திட்ட நிதியில் பிரேரணைகள் சமர்ப்பித்து கட்டிவதற்கும் இதனை இடித்து அப்புறப்படுத்தவும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**20.** இந்நகராட்சியிக்குட்பட்ட வார்டு எண். 27 முள்ளிக்கொரை பகுதியில் ரேசன் கடைக்கு மேல் உள்ள பம்பையன் லைன் பகுதியில் உள்ள லூக்காஸ் என்பவர் வீட்டில் இருந்து மள்ளப்பன் என்பவர் வீடு மற்றும் சாந்தி என்பவர் வீடு வரை நடைபாதை மற்றும் தடுப்புச்சுவர் இல்லாத நிலையில் அப்பகுதி மக்கள் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இப்பகுதியில் தடுப்புச்சுவர் இல்லாதால் முதியவர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் சென்று வருவதற்கு மிகவும் சிரம்மப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக தடுப்புச்சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும் இதற்காக தயராக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.90/- இலட்சத்திற்கு நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**21.** இந்நகராட்சியிக்குட்பட்ட வார்டு எண். 27 முள்ளிக்கொரை பகுதியில் குட்ஷெப்பர்டு பள்ளி முதல் புருசோத்தமன் என்பவர் வீடு வரை உள்ள குடிநீர் குழாய் ஆனது பழுதடைந்து மழையினால் துருப்பிடித்து உடைந்து உள்ளது. இதனால் இக்குடிநீர் குழாய் வழியாக குடிநீர் வழங்கப்படும் பகுதிகளுக்கு சீரான குடிநீர் வழங்க முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் பழுதடைந்துள்ள 3” குடிநீர் குழாய்க்கு பதிலாக புதிதாக 3” குடிநீர் குழாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.95/- இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

22. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6-ல் கீழ்கோடப்பமந்து நகராட்சி பள்ளி வளாகத்தில் மூன்றாவது குடிநீர் திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள தரைமட்ட தொட்டியில் உள்ள 60 HP மின் மோட்டாரில் இருந்து மேல் கோடப்பமந்து பகுதியில் கோத்தகிரி சாலையில் உள்ள தரைமட்ட தொட்டிக்கு நீர் அனுப்பபட்டு அங்கிருந்து Gravity மூலம் கீழ்கோடப்பமந்து, ஆரணி அவுஸ், வண்ணாரப்பேட்டை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது இந்த 60 HP நீர்மூழ்கி மோட்டார் அதிக மின் அழுத்தத்தினால் பழுதடைந்துள்ளது. இதனால் மேற்கண்ட பகுதிகளுக்கு குடிநீர் வினியோகம் செய்ய முடியாமல் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் பழுதடைந்துள்ள 60 HP மின் மோட்டார் பழுது நீக்கம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.65/- இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**23.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3-ல் உள்ள ஷெடன் சாலையில் உள்ள கழிவுநீர் தொட்டியானது பழுதடைந்துள்ளதால் கழிவுநீரானது தார் சாலையில் செல்கிறது. இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்றும் அபாயம் உள்ளது. மேலும் இச்சாலையில் கழிநீர் செல்வதால் இந்த கழிவுநீரை அப்பகுதியில் செல்லும் முதியோர்கள், பள்ளிக் குழந்தைகள் ஆகியோர்கள் இதனை மிதித்துக்கொண்டு செல்கின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த கழிவுநீர் தொட்டியை புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.50/- இலட்சத்திற்கு நகராட்சி வடிகால் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**24.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்டட பகுதிகளில் பெரும்பாலான தார் சாலைகளில் கழிவுநீர் தொட்டிகள் சாலையை விட தாழ்வாக உள்ளது. இதனால் மழைகாலங்களில் இக்குழிகளில் மழைநீர் தேங்குவதோடு வாகன ஓட்டுனர்கள் மற்றும் பொதுமக்கள், முதியவர்கள் சாலையை கடக்க சிரம்மப்படுவதோடு இருசக்கர ஓட்டுனர்கள் அடிக்கடி விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதால், தார் சாலைகளில் உள்ள கழிவுநீர் தொட்டிகளை உயர்த்திவும் பழுதடைந்த மூடிகளை மாற்றியமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.90/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

25. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் திட்ட பணிகளை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் 27.10.2023 அன்று நேராய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது காந்தல் பகுதியில் அமைந்துள்ள "நூலகம் மற்றும் அறிவுசார் மையம்" கட்டிடம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , திருப்பூர் அவர்களால் நேராய்வு செய்யப்பட்டது. ஆய்வின் போது நூலக கட்டிடத்திற்கு (LED Lighting arrangements – Name board) பெயர் பலகை, புத்தகங்கள் அடுக்கி வைப்பதற்கான கூடுதலாக Rack arrangements தீயணைப்பான், மணல் வாலி, 2 kva ups, 3 phase connection from EB Office, நூலக கட்டிடத்தின் வெளிப் பகுதிகளில் புல்தரை அமைக்கும் பணி மற்றும் பூச் செடிகள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் படி அறிவுறுத்தப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் அறிவுரையின்படி மேற்குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.50/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

26. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26-ல் நகராட்சி பொதுக் கழிப்பிடத்தில் உள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் தரைதளம், தண்ணீர் குழாய் ஆகியவை பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் பொதுக் கழிப்பிடத்தினை பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே பொது கழிப்பிடத்தினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட பொதுக் கழிப்பிடத்திற்கு பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

27. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பீட்டன்ஸ் சாலையில் பாராளுமன்ற உறுப்பினர் அலுவலகம் முன் பகுதியில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அடிக்கடி கழிவுநீர் ராட்டன் டாடா சாலை சந்திப்பில் வழிந்தோடுகிறது. இதனால் வாகன ஓட்டுனர்கள், பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் சாலையை கடக்க மிகவும்

சிரம்மப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.5.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

28. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.26-ல் இந்திரா காலனி பகுதியில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் நடைபாதையில் வழிந்தோடுகிறது. எனவே மேற்கண்ட சாலையில் பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் மற்றும் முதியவர்கள் சாலையை கடந்து செல்ல மிகவும் சிரமப்படுவதால் மேற்கண்ட கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்கண்ட கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

29. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 23-வது வார்டு மேரிஸ் ஹில் பகுதியில் ராஜா, ராகுல் வீடு முதல் திரு கார்டர் அவர்கள் வீடு வரை பொது நடைபாதை மிகவும் மோசமான நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட நடைபாதையை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள நடைபாதையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

30. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பேண்டு லைன் பகுதியில் கழிவுநீர் குழாய் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட நடைபாதையில் பொதுமக்கள் கடந்து செல்ல மிகவும் சிரமப்படுவதால் மேற்கண்ட கழிவுநீர் குழாய்களை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

31. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்ச் ஹில் பகுதியில் குடியிருப்பு பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் மேற்கண்ட சாலையை கடக்க மிகவும் சிரமப்படுவதால் மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவர் அமைக்கும் படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுதுள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு மேற்கண்ட

இடத்தில் பொதுமக்கள் நலன் கருதி தடுப்பு சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.6.25/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

32. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 23-வது வார்டு மேரிஸ்ஹில் பகுதியில் ரேஷன் கடைக்கு கீழ் பகுதியில் உள்ள இடத்தில் தெரு விளக்கு அமைக்க மின் கம்பம் இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் பொதுமக்கள் பள்ளி குழந்தைகள் மற்றும் முதியவர்கள் சாலையை கடந்து செல்ல மிகவும் சிரமப்படுவதாக நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட இடத்தில் புதிதாக மின் கம்பம் அமைக்க நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**33.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 25ல் அருந்ததியர் காலனி பகுதியில் பொதுக்கழிப்பிடம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இக்கழிப்பிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட கழிவறையை பொதுமக்கள் உபயோகப்படுத்த மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் இந்த கழிவறையை இடித்து மேற்கண்ட இடத்தில் புதிதாக பொதுக்கழிப்பிடம் கட்ட ரூ.10.00/- இலட்சம் மதிப்பீட்டில் நகர மன்ற தீர்மான எண். 33/ 25.04.2022-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே உள்ள பழைய பழுதடைந்துள்ள நகரட்சி பொதுகழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.90/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**34.** உதகமண்டலம் நகராட்சிக்கு சொந்தமான வாகன எண். TN 43 C-7391 Desiltman கழிவுநீர் தொட்டிகளில் மண் அகற்றும் வாகனம் பழுதடைந்துள்ளது. உதகமண்டலம் நகராட்சியில் கழிவுநீர் தொட்டிகள் உள்ளன. மேலும் இந்நகராட்சியில் 2 எண்கள் Desiltman Vehicle உள்ளன. இவற்றில் ஒரு வாகனம் மட்டும் தற்பொழுது பயன்பாட்டில் உள்ளது. எனவே நகர் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மேற்கொள்ள சிரமமாக உள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் தொட்டிகளில் மண் அகற்றும் வாகனத்தினை பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.4.00/- இலட்சம் ஆகும். பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

35. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 24 மூவுலகரசி அம்மன் திருக்கோயில் அருகில் உள்ள நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட இடத்தில் பள்ளி குழந்தைகள், பொதுமக்கள் மற்றும் முதியவர்கள் மேற்கண்ட நடைபாதையை

கடக்க மிகவும் சிரமப்படுவதாலும், பொதுமக்கள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளதாலும், மேற்கண்ட நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை சீரமைத்து தரக்கோரி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில், பொதுமக்கள் நலன் கருதி மேற்படி சாலையில் உள்ள நடைபாதை மற்றும் மழைநீர் கால்வாயினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

36. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 30ல், குடிநீர் வடிகால் வாரியம் செல்லும் சாலையில் மழைநீரானது அதிக அளவில் வருவதால் அடிக்கடி தார்சாலை பழுதடைந்துள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் மழைநீர் கால்வாய் அமைத்துத் தரும்படி நகரமன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில், இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.6.00/- இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

37. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 10-ல் ஜோகி மேஸ்திரி லைன் பகுதியில் மழைநீர் கால்வாய் கழிவுநீர் குழாய்கள் மற்றும் கழிவுநீர் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் நடைபாதையிலேயே வழிந்தோடுவதால், மேற்கண்ட பகுதியில் பள்ளி செல்லும் குழந்தைகள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகி வருவதால். மேற்கண்ட இடத்தில் உள்ள கழிவுநீர் குழாய்கள், தொட்டிகள் மற்றும் மழைநீர் கால்வாயினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் பொதுமக்கள் நலன் கருதி மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

38. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10ல் மேல்போகி தெரு பகுதியில் 2" மற்றும் ¾" விட்டமுள்ள குடிநீர் பகிர்மான குழாய் ரெட்கிராஸ் சாலையில் மிகவும் பழுதடைந்துள்ளதால், குடிநீர் அதிக அளவில் வீணாவதுடன் மேல் போகி தெருவிலுள்ள பொதுமக்களுக்கு குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே மேற்கண்ட குடிநீர் குழாயினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில், பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையில் பழுதடைந்துள்ள 2" மற்றும் ¾" விட்டமுள்ள குடிநீர் குழாயினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.00/- இலட்சத்திற்கு பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**39.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின் படி 3000 எண்கள் மரக் கன்றுகள் நடுவதற்கும் மற்றும் அதற்கான செலவு தொகை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**40.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகள் 1. பழைய உதகை நகராட்சி தொடக்கப்பள்ளி 2. டாக்டர் பசுவைய்யா நகர் நகராட்சி தொடக்கப்பள்ளி 3. மியாஞ்சிபேட் (மெயின் பஜார்) நகராட்சி தொடக்கப்பள்ளி 4. கீழ் கோடப்பமந்து நகராட்சி தொடக்கப்பள்ளி 5. மேல் தலையாட்டிமந்து நகராட்சி நடுநிலைப் பள்ளி 6. உருது நகராட்சி நடுநிலைப்பள்ளி, காந்தல் ஆகிய பள்ளிக் கூடங்களில் (Smart class) Smart வகுப்பறை அமைக்கும் பணிக்கு பிரேரணைகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இதனை நகரமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

41. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட North Lake road, குளிசோலை சாலை, ஆரணி ஹவுஸ் சாலை. மஞ்சனகொரை (Hobart road) தீட்டுக்கல் சாலை, தலையாட்டுமந்து சாலை, மெயின்பஜார்சாலை, அப்பர் பஜார்சாலை, மற்றும் South lake Road ஆகிய சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் சாலையிலுள்ள குழிகளில் தேங்கி நிற்பதால் வாகன ஓட்டுனர்கள், பொதுமக்கள் பள்ளி குழந்தைகள் மற்றும் முதியவர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள தார் சாலையில் தார் ஓட்டும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

42. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.9ல் பெரியார் காலனி பகுதியில் மஞ்சு வீட்டிலிருந்து ஜேசாப் வீடு வரை உள்ள நடைபாதை மிகவும் மோசமாக உள்ளதால் மேற்கண்ட சாலையை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில், மேற்கண்ட நடைபாதையை பழுது நீக்கம் செய்யவும் மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

43. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஸ்பென்சர் சாலை மற்றும் ஸ்டேட்பேங்க் பின்புறமுள்ள தார்சாலைகளில் கழிவுநீர், தார் சாலையிலேயே செல்கிறது. இதனால் பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் தார் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுவதோடு, சுகாதார சீர்கேடும் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இப்பொருள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்

அவர்கள் பலமுறை சாலையிலுள்ள கழவுநீர் கால்வாயினை சீரமைக்கும்படி அறிவுறுத்தியுள்ளார். எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை சீராமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.50/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்,**

44. இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 09 -08-2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுககு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது..

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சியில் கழிவுநீர் பணிகளை மேற்கொள்ள தேவையான பொருட்கள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு பொருட்கள் விநியோகம் செய்யும் பணி. | 2.00 |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | திருவாளர்கள் M/s.. Sams Electricals அவர்கள் 0.03% மதிப்பீட்டை விட குறைவு | திருவாளர்கள் M/s.. Sams Electricals அவர்கள் 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | திருவாளர்கள் Rajasekar அவர்கள் 8.62% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**45.** இந்நகராட்சியில் கடந்த 1 ஆண்டு காலமாக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் விவரங்களை பல்வேறு நாளிதழ்களில் சிறப்பு மலர்களில் பிரசுரம் மேற்கொள்ளப்பட்ட வகையில் தோராயமாக ரூ.3.00 இலட்சத்திற்கு செலவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொகையினை சம்பந்தப்பட்ட நாளிதழ்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

.

**அலுவலக குறிப்பு:**

**மேற்கண்ட தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கலாம்**

**(ந.க.எண்.இ1 /703 /2023)**

46. இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் 10-11-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது..

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து கணினிகளுக்கும் மென்பொருள் (Anti Virus ) நிறுவும் பணி | ரூ.37,000/- |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர்கள் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Key Info Development System அவர்கள் 0 % மதிப்பீட்டு விலை (Same Rate) | M/s.Key Info Development System அவர்கள் 0 % மதிப்பீட்டு விலை (Same Rate) |
| 2. | M/s. Perfect System அவர்கள் (+) 1.0.11% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Key Info Development System, Ooty ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**47.** இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் 10 -11-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுகசு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது..

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகத்திற்கு புதிதாக இரண்டு மடிக்கணிணி Laptop வாங்கும் பணி | ரூ.2.80 இலட்சம் |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் |
|---|---|---|

| | | பெயர்கள் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Key Info Development System அவர்கள் 0 % மதிப்பீட்டு விலை ( Same Rate) | M/s.Key Info Development System அவர்கள் 0 % மதிப்பீட்டு விலை ( Same Rate) |
| 2. | M/s. Perfect System அவர்கள் (+)0 ,92% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Key Info Development System, Ooty ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**48.** இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் 10-11-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது..

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலகத்தில் உள்ள மடிக்கணிணியை (Laptop) பழுதுபார்க்கும் பணி | ரூ.15,000/- |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர்கள் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Key Info Development System அவர்கள் (-) 0.34 % மதிப்பீட்டை விட குறைவு | M/s.Key Info Development System அவர்கள் (-) 0.34 மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | M/s. Perfect System அவர்கள் (+) 1,01% மதிப்பீட்டை விட கூடுதல் | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Key Info Development System, Ooty ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**49.** உதகமண்டலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் 36 வார்டுகளிலும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ள செடி மற்றும் புல்களை வெட்டுவதற்காக புல்வெட்டும் இயந்திரம் புதியதாக கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. அதற்காக .,

Hand Grass cutter 5 எண்ணிக்கையும்

Heavy Grass cutter 5 எண்ணிக்கையும்

புதிதாக கொள்முதல் செய்வதற்காக உத்தேச செலவினம் ரூ.5,00,000/- மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.,

**அலுவலக குறிப்பு –**

**மன்ற அனுமதி ஏற்கலாம்.**

**(ந.க.எண்-361/2019/எச்2)**

**50.** உதகமண்டலம் நகராட்சியில் நடைபெறவுள்ள நகர்மன்ற கூட்டப்பொருட்களை நகர்மன்ற உறுப்பினர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஆகியோருக்கு வழங்க இவ்வலுவலகத்தில் போதிய வசதி இல்லாத காரணத்தினால் அவசர அவசியம் கருதி Auro Xerox –ல் பிரதிகள் எடுக்க அனுமதியும், ஆகஸ்டு 2023ம் மாதம் முதல் ஏற்படும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள அனுமதியும் வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.சி2/8156/2023)**

51. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24ல் பாரதிதாசன் தெரு, மேல் தங்களாம் தெரு, கீழ் கோவிந்தன் தெரு, லட்சுமி தெரு ஆகிய பகுதியில் பாதாள சாக்கடை தொட்டிகள், குழாய்கள், மழை நீர் கால்வாய் நடைபாதை மற்றும் தடுப்புசுவர் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட பணிகளை சரி செய்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள கழிவுநீர் தொட்டிகள், குழாய்கள், மழைநீர் கால்வாய், நடைபாதை மற்றும் தடுப்புசுவர் அமைக்கவும், மேலும் இப்பணிகள மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

52. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24-ல் முத்து கருப்பன் தெரு, தியாகி குமரன் தெரு, பாரதியார் தெருவில் அமைந்துள்ள கழிவுநீர் குழாய், மழைநீர் கால்வாய் மற்றும் நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் மேற்குறிப்பிட்டுள்ள பணியினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட பணி

மேற்கொள்ளவும் இதற்கான தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

53. நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் பென்னட் மார்கெட் பகுதியில் அமைந்துள்ள உருது நடுநிலைப் பள்ளியில் கழிவறை வசதி இல்லாத காரணத்தால் மேற்கண்ட பள்ளியில் பள்ளி குழந்தைகள் நலன் கருதி புதிய கழிவறை கட்ட தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.18.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி வடிகால் மற்றும் குடிநீர் நிதி/ கல்வி நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

54. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் கழிவு நீரேற்று நிலையத்தில் தினசரி கழிவு நீரின் அளவினை அளவீடு செய்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் OCMS (Online Effluent Water Continous Monitoring System) கண்காணிக்கப்பட்டு அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதால் 400 mm விட்டமுள்ள Flow meter வாங்கி Inlet கழிவுநீர் குழாயில் பொருத்தி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.00/- இலட்சத்திற்கு பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

55. உதகமண்டலம் நகராட்சியின் 36 வார்டுகளின் குப்பைகளை சுமார் 70 ஆண்டுகளுக்கு மேலாக தீட்டுக்கல் உரக்கிடங்கில் கொட்டி அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. நகர் பகுதியிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் தீட்டுக்கல் உரக்கிடங்கு அமைந்துள்ளது. மேற்கண்ட சாலையானது தொட்டபெட்டா பஞ்சாயத்திற்கு சொந்தமான தார் சாலையாகும். Soil conversation சாலை முதல் தீட்டுக்கல் உரக்கிடங்கிற்கு வரை உள்ள தார் சாலையின் நீளம் 1.50 கி.மீ ஆகும். இச்சாலை தற்பொழுது மிகவும் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட சாலையில் நகராட்சி வாகனங்கள் சுமார் 45 எண்கள் தினசரி இரண்டு முறை சென்று வருகிறது. மேற்கண்ட தார் சாலை மிகவும் பழுதடைந்து பெரிய பெரிய குழிகள் உள்ளதால், மழை காலங்களில் மழைநீர் தேங்கி நிற்பதால் இருசக்கர வாகனம் மற்றும் 4 சக்கர வாகன ஓட்டுனர்கள் மற்றும் பொதுமக்கள் தார் சாலையை கடக்க மிகவும் சிரம்மப்படுகின்றனர். இதனால் வாகன விபத்து ஏற்படும் சூழ்நிலையும் உள்ளது. மேலும் நகராட்சி வாகனங்கள் 45 எண்கள் 2 Trip சென்று வருவதால் நகராட்சி வாகனங்கள் அடிக்கடி பழுது ஏற்படுகிறது. இதனால் நகராட்சிக்கு பெரும் நிதி இழப்பு ஏற்படுகிறது. எனவே நகராட்சி நிதி இழப்பினை கருத்தில் கொண்டு தொட்டாபெட்டா பஞ்சாயத்துக்கு சொந்தமான தார் சாலையை சிமெண்ட் கான்கிரீட் சாலையாக மாற்றி அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.50/- கோடியினை ஏதேனும் ஒரு திட்ட நிதியில் பெற்று பணி மேற்கொள்ள திட்டப் பிரேரணைகள் அரசுக்கு சமர்ப்பிக்கவும் தொட்டாபெட்டா

பஞ்சாயத்து சாலையை நகராட்சி மூலம் சீரமைக்க அனுமதி பெற்று, ஏதேனும் ஒரு திட்ட நிதி அரசிடம் பெற்று பணியினை மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

56. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.36ல் வேலிவியூ கிராண்டப் சாலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெய்த கனமழையினால் வேலிவியூ கிராண்டப் சாலையில் கதவு எண்.91/1 என்ற வீட்டின் அருகில் உள்ள மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் மண் திட்டை ஒட்டியுள்ள நடைபாதையும் பழுதடைந்து உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பள்ளிக் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் மழையினால் பழுதடைந்து உள்ள மண்திட்டை அகற்றி விட்டு தடுப்புசுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**பணி யின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம்.**

57. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.36ல் வேலிவியூ கிராண்டப் சாலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பு பெய்த கனமழையினால் வேலிவியூ கிராண்டப் சாலையில் நகராட்சி பம்ப் ஹவுஸ் அருகில் உள்ள மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் மண் திட்டை ஒட்டியுள்ள நடைபாதையும் பழுதடைந்து உடைந்து உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பள்ளிக் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் மழையினால் பழுதடைந்து உள்ள மண்திட்டை அகற்றி விட்டு தடுப்புசுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **பணி யின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம்.**

58. இந்நகராட்சிக்குட்பட்ட Dunmere Pump House அருகில் நகராட்சி குடியிருப்புகள் உள்ளது. அதில் க.எண். 638 என்ற குடியிருப்பின் கூரைகள் மரங்களின் கிளைகள் விழுந்து சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும் கதவுகள், ஜன்னல்கள், மின் இணைப்பு பணிகள் மேற்கொண்டு பல காலம் ஆகியுள்ளதால் இயற்கை சீற்றங்களால் சேதம் ஏற்பட்டு பழுதாகியுள்ளது. மேலும் மழைநீர் குடியிருப்புக்குள் சென்று விடுகின்றது. எனவே மேற்கண்ட பழுதுகளை சரிசெய்ய

வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகை ரூ.3,50,000./-க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணிகள் பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.**

59. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 32ல் நொண்டிமேடு பகுதியில் உள்ள ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 6" pipe ஆனது சுமார் 20 வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த குடிநீர் குழாய் பழுதடைந்துள்ளதால், இந்த குடிநீர் குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படும் பகுதிக்கு சீரான குடிநீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதி பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் சீரான குடிநீர் வழங்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றும் அனுமதிக்கலாம்**

**60.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 6-ல் மார்லிமந்து செல்லும் சாலையில் கடந்த ஆண்டு பெய்த மழையினால் சாலையின் ஓரத்தில் மண் சரிவு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது. இச்சாலையின் வழியாக தினந்தோறும் 50க்கும் மேற்பட்ட பேருந்துகள் கிராம பகுதிக்கு சென்று வருகின்றனர். மேலும் இச்சாலையானது கோடை சீசன் காலங்களில் கூடலூர் மற்றும் கேரளா, கர்நாடகா மாநிலத்தில் இருந்து வரும் வாகனங்களுக்கு ஒருவழிப்பகுதியாக மாற்றம் செய்யப்படுவது உண்டு. எனவே மேற்கண்ட சாலையில் DLS பழுதடைந்துள்ள இடத்தில் புதிதாக தடுப்புச்சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயராக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 13.50/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்,**

**61.** இந்நகராட்சிக்குட்பட்ட பெல்மவுண்டு பகுதியில் தெருவிளக்கு இல்லாததால் மிகவும் இருளாக உள்ளதால், அப்பகுதி பொதுமக்கள் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் இரவு நேரங்களில் நடந்து செல்லும் போது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் ஏற்கனவே உள்ள 6 மின்கம்பங்களில் மின்கம்பிகள் அமைக்க ஆகும் செலவுத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த நகரமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**62.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3ல் உள்ள சித்தி விநாயகர் காலனி என்ற பகுதியில் உள்ள சாலையானது கடந்த ஆண்டுகளில் பெய்த மழையினால் அரிக்கப்பட்டு பழுதடைந்து

குண்டும் குழியுமாக மாறி உள்ளது. இதனால் இச்சாலை வழியாக வாகனங்கள் சென்று வர மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்கள் இச்சாலையை பயன்படுத்த முடியாமல் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழையினால் பழுதடைந்துள்ள சாலையை புதிதாக சிமெண்ட் சாலையாக அமைக்க தயராக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.13.50/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**63.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 34-ல் மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து குன்னூர் சாலையை இணைக்கும் சிமெண்ட் நடைபாதை கடந்த சில நாட்களாக பெய்த மழையினால் சரிந்து விழுந்து பாதையின் நடுவில் பெரிய குழியும் அதனை சுற்றி விரிசல் ஏற்பட்டு பழுதடைந்துள்ளது. இதனால் இந்த நடைபாதையை பயன்படுத்தும் பள்ளிக் குழந்தைகள் பெரியவர்கள், வயதானவர்கள் நடைபாதையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த நடைபாதையை புதிதாக அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**64.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 35 காசா காலனி பகுதியில் மழைநீர் கால்வாய் இல்லாததால் மழைக்காலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்குள் புகுந்து விடுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் மழைக்காலங்களில் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.75/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**65.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8-ல் அமைந்துள்ள பாலிடெக்னிக் பகுதியில் சுமார் 30 குடும்பங்கள், கல்வீடு பகுதியில் சுமார் 70 வீடுகள் கழிவு நீர் இணைப்பு இல்லாமல், வீடுகளிலுள்ள கழிவு நீர் தொட்டி நிரம்பி, கழிவுநீர் வெளியேறுவதால். அப்பகுதியில் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் கழிவுநீர் நடைபாதையில் வெளியேறுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்று ஏற்படும் அபாயமும் உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பாதாள சாக்கடை பைப்லைன் மற்றும் மேன்ஹோல் அமைக்க வேண்டியது அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.25/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

**66.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 36 லவ்டேல் சாலை கீழ் காந்திநகர் பகுதியில் சுமார் 150 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியானது மிகவும் தாழ்வான பகுதியாக உள்ளதால் கடந்த வாரம் பெய்த மழையினால் நடைபாதை ஒட்டி உள்ள மண்திட்டு சரிந்துவிட்டது. இதனால் மண்திட்டை ஒட்டியுள்ள நடைபாதையும் பழுதடைந்து உள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் வயதானவர்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் இந்த நடைபாதையை பயன்படுத்த முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்த மண்திட்டை அகற்றிவிட்டு அவ்விடத்தில் தடுப்புச்சுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.7.50/- இலட்சத்திற்கு பணிமேற்கொள்ள நகராட்சி நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடரலாம்**

67. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மினி கார்டன் கழிவு நீரேற்று நிலையம் மற்றும் காந்தல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள மின் மோட்டார்கள் பேனல் போர்டுகள் இயக்கவும், பராமரிக்கவும் நகரமன்ற தீர்மான எண்.2471/09.02.2021, 2643/30.06.2021 மற்றும் 52/24.03.2022 அனுமதி பெறப்பட்டு 01.07.2021-ல் M/S Blesson Group உதகை அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்டங்கள் மற்றும் சுற்றறிக்கைகளில் தெரிவித்துள்ளதற்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு நகராட்சிகளிலும் தனியார் வெளிக் கொணர்வு நிறுவன ஒப்பந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும் தினசரி கூலியானது வெவ்வெறு தொகை உள்ளதினாலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகராட்சிகளில் ஒரே மதிரியான அடிப்படை தினசரி கூலி விலை விகிதம் நிர்ணயம் செய்யும் பொருட்டு கருத்துக்கள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. மேற்படி கருத்துகளின் அடிப்படையில் குறைந்தபட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதி வரை வரபெறாத காரணத்தினாலும் உத்தரவு பெறப்படும் வரை காந்தல் கழிவு நீரேற்று நிலையம் மற்றும் மினி கார்டன் கழிவு நீரேற்று நிலையத்தில் 24 மணி நேரமும் தடையில்லாமல் மின் மோட்டார்கள் இயக்கும் பணிக்காக (Day shift & Night shift) காந்தல் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையத்தில் wireman grade – II – 2 nos மற்றும் Electrical Helper Grade II – 2 nos மேலும் மினி கார்டன் கழிவு நீரேற்று நிலையத்தில் wireman grade – II – 2 nos மற்றும் Electrical Helper Grade II – 2 nos மூலம் மேலும் 6 மாத காலத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி அடுத்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை ஏற்கனவே பணி உத்தரவு வழங்கப்பட்ட ஒப்பந்தாரர் மூலம் வழங்கப்பட்டு வரும் பணியாளர்கள் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகிதத்திலேயே ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளிகள் கோரிய தொகையிலேயே தொடர்ந்து பணி மேற்கொள்ள 01.09.2023 முதல் 28.02.2024 வரை 6 மாத காலம் கால நீட்டிப்பு செய்து வழங்கவும் மேற்காணும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.14.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பட்டியல் தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**68.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் முக்கோணம் பகுதியில் அமைந்துள்ள கழிவு நீரேற்றும் நிலையத்தில் உள்ள மின் மோட்டார் இயக்கவும் Panel board, NRV valve ஆகியவற்றை பராமரிக்கவும் ரூ.3.00/- இலட்சம் மதிப்பீட்டில் 01.03.2021 முதல் 02.08.2022 வரை நகரமன்ற தீர்மான எண்.2451/25.01.2021-ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்ததாரர் M/S Sams Electricals மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு மின்கம்பி உதவியாளர் Electrical Helper மூலம் ரூ.3.00/- இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் 01.03.2023 முதல் 31.08.2023 வரை 6 மாத காலத்திற்கு ரூ.1.50/- இலட்சம் மதிப்பீட்டில் ஏற்கனவே உள்ள மின் கம்பி உதவியாளர் மூலம் பணி மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.1152/27.04.2023-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேற்படி கருத்துக்களின் அடிப்படையில் குறைந்தபட்ச தினசரி கூலி நிர்ணயம் செய்து உரிய உத்தரவு நாளது தேதிவரை வரப்பெறாத காரணத்தினால் உத்தரவு பெறப்படும் வரை காந்தல் கழிவு நீரேற்றும் நிலையத்தில் ஒப்பந்தப் பணியாளர்கள் மின் கம்பி உதவியாளர் மூலம் பணி மேற்கொள்ள 01.09.2023 முதல் 28.02.2024 வரை 6 மாத காலத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது. எனவே பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும் அடுத்து ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கும் வரை தற்பொழுது பணி செய்து வரும் மேற்படி தனியார் நிறுவனத்தின் பணி உத்தரவினை ஏற்கனவே வழங்கி வரும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அங்கீகரித்துள்ள விலை விகித்திலேயே (ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகையிலேயே ) தொடர்ந்து பணி மேற்கொள்ளவும் 6 மாத காலம் கால நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கவும். மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.50/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட பணிக்கு நகரமன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று ஒப்பந்தாரருக்கு பட்டியல் தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**69.** இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 2 விசி காலனியில் கதவு எண்.163 வசந்தா என்பவரின் வீட்டின் முன்புறம் கடந்த மாதம் பெய்த கன மழையினால் மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் நடப்பதற்கு கூட வழியில்லாமல் மிகவும் சிரம்மபடுகின்றனர். எனவே மேற்கண்ட மண்திட்டு சரிந்து உள்ள இடத்தில் உள்ள மக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புச்சுவர் உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.75/- இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

**70.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5-ல் ஆரணி ஹவுஸ் பகுதிகளில் ஆரணி ஹவுஸ் மெயின் சாலை மற்றும் 1st கிராஸ் சாலைகள் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டது.

தற்போது அந்த சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளதால் நடைபயணம் மேற்கொள்ளும் மக்கள் மற்றும் பள்ளிக்கு செல்லும் குழந்தைகள் இரு சக்கர வாகன ஓட்டிகள் மற்றும் நான்கு சக்கர வாகனம் சென்று வர சிரமமாக உள்ளது. மேலும் மழைகாலங்களில் குழிகள் தெரியாததால் கீழே விழும் அபாயமும் உள்ளதால் அசம்பாவிதம் ஏதும் ஏற்படும் முன் அந்த சாலையை சீரமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட சாலையை சீரமைக்க தோராய மதிப்பீட்டு தொகை ரூ.9.95/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.**

**71.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கீழ் கோடப்பமந்து திரு.பாலமுருகள் அவர்கள் வீட்டிலிருந்து திரு.குமார் அவர்கள் வீடு வரை நடைபாதை ஒரு வழி பாதையாக மிக மேசாமாக உள்ளது. அங்கு சுமார் 100-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அவர்கள் அனைவரும் இந்த நடைபாதையை மட்டுமே பயன்படுத்துகின்றனர். அவ்வாறு பயன்படுத்தும் போது குழந்தைகள், வயதானவர்கள் அதிகமாக சென்று வருகின்றனர். மேலும் மழை காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதால் கீழே விழும் நிலையும் அதிகம் ஏற்படுகின்றது இரவு நேரங்களில் அந்த பாதையை பயன்படுத்தும் போது வயதானவர்கள் கீழே விழுகின்றனர். எனவே மேற்கண்ட பாதையை சரி செய்ய அதற்கான தோராய மதிப்பீட்டு தொகை ரூ.9.95/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **பணியை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.**

72. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5-ல் மேல் கோடப்பமந்து விநயாகர் கோவில் அருகில் அமைந்துள்ள நடைபாதையில் பாதாள சாக்கடை மேன்ஹோல்கள் அமைந்துள்ளது. அதில் அடிக்கடி அடைப்பு ஏற்பட்டு நடைபாதையில் செல்கின்றது. அவ்வாறு செல்வதால் பொதுமக்கள் பள்ளி குழந்தைகள் அந்த நடைபாதையில் செல்லும் போது அதிகம் சிரமப்படுகின்றனர். ஆகையால் தொற்று நோய்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது. மேலும் வயதானவர்கள் செல்லும் போது கீழே விழும் அபாயமும் உள்ளது. எனவே நடைப்பாதையில் உள்ள மேன்ஹோல்களை உயர்த்தியும் சரி செய்தும் உடைப்பு ஏற்பட்டுள்ள பைப்புகளை சரிசெய்யவும் வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகை ரூ.9.00/- இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளலாம்.**

**73.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 34 மேல்தலையாட்டுமந்து, பெரியாண்டவர் பகுதிக்கு செல்லும் நடைபாதையை ஒட்டியுள்ள மண்திட்டு தற்பொழுது பெய்த மழையினால் பழுதடைந்துள்ளது. இதனால் மண்திட்டை ஒட்டியுள்ள நடைபாதையும் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பள்ளிக் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் இந்த நடைபாதையை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புச்சுவர்

உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.00/- இலட்சத்திற்கு SADP நிதி பெற்று பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**74.** உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 36 ல் மஞ்சனக்கொரை பகுதியில் மினிக்கி சோலையில் நகராட்சி நவீன எரிவாயு தகன மேடை அமைந்துள்ளது. இந்த எரிவாயு தகன மேடையை பராமரிப்பு பணி மற்றும் எரியூட்டும் பணியினை மேற்கொள்ள ஒரு சவத்தை எரியூட்டும் நபர் மற்றம் இரண்டு உதவியாளர்கள் என மொத்தம் மூன்று நபர்களுக்கும் மேலும் ஒரு சவத்தை எரியூட்டுவதற்கான எரிவாயு சிலிண்டர் தொகை ரூ.1000./- வீதம் வருடத்திற்கு ஆகும் மொத்த தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் நவீன எரிவாயு தகன மேடை பராமரிப்பு பணி மற்றும் எரியூட்டும் பணி மேற்கொள்ள, நகர்மன்ற தீர்மான எண். 385, நாள் 30-06-2016 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நவீன எரிவாயு தகனமேடை பாரமரிப்பு மற்றும் எரியூட்டும் பணியானது ஜனவரி 2023 உடன் முடிவடைய உள்ளதால் இப்பணியினை மேலும் மூன்று வருடங்களுக்கு நீட்டிப்பு செய்ய நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

(ஒம்) திருமதி.எம்.வாணீஸ்வரி,
**நகரமன்ற தலைவர்,**
**உதகமண்டலம் நகராட்சி**

/உ.ந.உ.ப/



ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.

உதகமண்டலம்

30.11.2023

அன்புடையீர்

வணக்கம், இந்நகர்மன்ற நவம்பர் 2023ம் மாத அவசரக் கூட்டம் வருகின்ற 30.11.2023 வியாழக்கிழமை அன்று காலை 12.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் செயல்முறை எண். ந.க.எண். 21627/2021/ எம்3, நாள். 11.10.2021-ல் அனைத்து நகராட்சிகளிலும், பாரமரிப்பு பணிகள் தவிர முதலான பணிகள் உட்பட அனைத்து இதர பணிகள் பொது நிதியின் கீழ் மேற்கொள்ளப்படும் நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு மன்ற தீர்மானம், மதிப்பீடு மற்றும் எடுத்துக் கொள்ளப்படும் பணி மேற்கொள்வதற்கான அவசியம் குறித்து பொறியாளர் அறிக்கை போன்றவற்றுடன் கருத்துருக்கள் அனுப்பி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற்ற பின்பு மட்டுமே பணி மேற்கொள்வதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் நகரமன்ற பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அனுமதிக்காக.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

2. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17-ல் பழைய கார்டன் சாலையில் மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. மழை காலங்களில் மழைநீர் வீடுகளுக்குள் புகுந்துவிடுவதால் மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை பழுது நீக்கம் செய்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை பழுது நீக்கம் செய்ய ஆகும் மதிப்பீடு தொகை செலவினத்தை நகராட்சி பொதுநிதி / திட்ட நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

3. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17-ல் கிரீன் பீல்டு பகுதியில் கழிவு நீர் குழாய்கள் மற்றும் தொட்டிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் கழிவுநீர் நடைபாதையில் செல்வதால், மேற்கண்ட இடத்தில் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் உள்ள கழிவுநீர் குழாய்கள் மற்றும் தொட்டிகளை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சீரமைக்க ஆகும் மதிப்பீடு தொகை செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி / திட்ட நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

4. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 36 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை தீட்டுக்கள் உரக்கிடங்கில் சேகரம் செய்யப்பட்டு, குப்பைகளை பிரித்து எடுத்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி 36 MT அளவுள்ள குப்பைகள் ( 21 Tonne – Wet Waste, 9 Tonne – Plastic Waste, 2 Tonne – Cloth , 4 Tonne Other Waste ) சேகரமாகிறது. மேலும் உதகமண்டலத்தில் தட்பவெப்ப நிலை காரணமாக ஈர குப்பைகள் மக்குவதற்கு சாதகமான சூழ்நிலை இல்லாத காரணத்தால் தீட்டுக்ககல் உரக்கிடங்கில் குப்பைகள் அதிகமாக குவிந்துள்ளது. எனவே தினசரி சேகரமாகும் அனைத்து குப்பைகளையும் O கழிவுகளாக (Zero Waste) மாற்றியமைக்க கலந்தாலோசகரை நியமித்து பிரேரணைகள் அரசுக்கு சமர்ப்பிக்கவும் மேற்கண்ட பணிக்கு மதிப்பீடு தொகையில் 1 % கலந்தாலோசகருக்கு வழங்கவும் நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

5. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் கழிவு நீரேற்று நிலையத்தில் பழுதடைந்துள்ள குப்பை தொட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. 28-11-2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் நேராய்வின் போது பழைய பழுதடைந்துள்ள குப்பை தொட்டிகளை பொது ஏலம் வைத்து அப்புறப்படுத்தும்படி அறிவுறுத்தியுள்ளனர். எனவே குப்பை தொட்டிகளை பொது ஏலம் வைக்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

6. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 36 வார்டுகளில் 27 வார்டுகளில் பாதாள சாக்கடை இணைப்புகள் உள்ளன. 6 வார்டுகளில் சில பகுதிகளிலும்

3 வார்டுகளில் பாதாள சாக்கடை இணைப்புகள் இல்லாமலும் உள்ளது. இந்நகராட்சிக்குட்பட்ட பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை இணைப்புகள் சுமார் 30 ஆண்டுகளுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ளதாலும் பல இடங்களில் குழாய்கள் பழுதடைந்து கழிவுநீர் வெளியாகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே 36 வார்டு பகுதிகளிலுள்ள கழிவுநீர் குழாய்களை ஆய்வு செய்து மாற்றியமைக்க திட்ட ஆலோசகரை நியமித்து மதிப்பீடு தயாரிக்கவும் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் பிரேரணைகளை அரசுக்கு சமர்ப்பிக்கவும் இதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகையில் 1% தொகையினை (consultant) திட்ட ஆலோசகருக்கு வழங்கவும் நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

7. உதகமண்டலம் நகராட்சிக்கு புதிதாக பாதாள சாக்கடை தொட்டிகளில் மண் அகற்றுவதற்காக பாதாள சாக்கடை தொட்டியில் மண் அகற்றும் வாகனம் ( Desilting Vehicle ) Bolero, Pickup வாகனத்தில் Vambask Private Ltd.., நிறுவனம் மூலம் Body Built செய்து புதிதாக வாகனம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

8. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கெரடா சாலை பகுதியில் பழைய புல எண். 1098 க்கு புதிய ரி.சர்வே எண். 5056 இதற்கு இணையான மறு நில அளவை புதிய புல எண். K/12/110 மற்றும் K/12/111 ஆகும். பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் மண் சாலையினை சுமார் 30 வருடங்களாக பொதுமக்கள் மேலும் அப்பகுதியில் 12 குடும்பங்கள் அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது பொதுமக்களின் அடிப்படை வசதிக்காகவும் விருப்பத்திற்காகவும், மேற்படி சாலையினை நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்து கொள்ள விண்ணப்பம் பெறப்பட்டது. எனவே மேற்படி சாலையினை நகராட்சிக்கு ஏற்று கொள்வதற்கும் சாலை அமைப்பதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

9. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 20 இடங்களில் W.P.15120/2019 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஆட்சித் தலைவர் அவர்களால் நிறுவி பயன்பாட்டில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் மூலம் மேற்கண்ட குடிநீர் இயந்திரம் 20 எண்களும் ஓராண்டு பராமரிப்பு Amba Pipes

மற்றும் Neptune Automation அவர்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது பராமரிப்பு முடிவடைந்துள்ளதால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண் ந.க.எண். டி9 8775.2019, நாள் 14-11-2023 –ன்படி குடிநீர் வழங்கும் இயந்திரத்தினை உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதிகளில் பழுதடைந்துள்ள குடிநீர் வழங்கும் இயந்திரத்தினை பழுது நீக்கம் செய்து சீராக குடிநீர் வழங்கவும் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் செலவின தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ளவும் நகரமன்ற அனுமதி வேண்டபடுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

(ஒம்) திருமதி.எம்.வாணீஸ்வரி,
**நகரமன்ற தலைவர் ,**
**உதகமண்டலம் நகராட்சி.**

/உ.ந.உ.ப/



ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.